வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 539/2020

வழக்கு சாட்சி LW1 / PW4

| பெயர் | நாகராஜ் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | குமார் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 24 |

தேதி 22.05.2025

எதிரி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் வியாசர்பாடி பகுதியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு எழுத படிக்க தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. 4 –5 ஆண்டுகளுக்கு முன்பு குடி போதையில் இருந்தார். ரூபன் என்னை காவாங்கரையில் நான் வரும் போது என்னை அசிங்கமாக பேசினார். நான் ஏன் இவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்டேன். அவர் நான் வெளியில் ஆட்டோ ஓட்ட சென்றபிறகு அவர் எனது வீட்டில் புகுந்து வீட்டை அடித்து உடைத்துவிட்டார். நானும், எனது அம்மாவும் சேர்ந்து புழல் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி புகாரானது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நான் கண்ணப்பசாமி நகரில் குடியிருக்கிறேனா என்றால் தற்போது இல்லை. என்னை அசிங்கமாக பேசியதாக கூறும்போது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 4,5 நபர்கள் இருந்தார்கள். எங்களுக்குள் வாய்தகராறு மட்டும்தான் என்றால் ஆமாம். வேறு பணத்தகராறு ஏதும் இல்லை என்றால் ஆமாம். எனது அம்மாதான் புகார் அளித்தார் என்றால் ஆமாம். நான் உடன் சென்றேன் என்றால் ஆமாம். ரூபன் சக்கரவர்த்தியை எனக்கு தெரியுமா என்றால் எனது வீட்டின் அருகில்தான் உள்ளார். புகாரில் என்ன எழுதியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. பொய்யாக புகார் என்றாலும், போலீசாருக்கு ஆதரவாக நான்

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.  சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.  போலீசார் சொல்வதை நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**